| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>செல்லையன் | அ.வ.எண். 16/2018 | 21.08.2024 |

<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>

18.04.1990 தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து எனது தாத்தா எனக்கு எழுதிக்கொடுத்த உயில் ஆவணம் அசல் வா.சா.ஆ.1, தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு நான் செலுத்திய வீட்டுவரி ரசீது அசல் எண்ணிக்கை – 15 வா.சா.ஆ.2, தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கான மின்கட்டண அட்டை எண்ணிக்கை 2 அசல் வா.சா.ஆ.3, எனது வாக்காளர் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.4, எனது குடும்ப அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.5 11.06.2007 தேதியிட்ட மாவட்ட ஆட்சித்தலைவருக்கு நான் அனுப்பிய மனு கைநகல் வா.சா.ஆ.6, 20.07.2007 தேதியிட்ட மாவட்ட ஆட்சித்தலைவருக்கு நான் அனுப்பிய மனு கைநகல் வா.சா.ஆ.7, 20.07.2007 தேதியிட்ட இலால்குடி வருவாய் கோட்டாட்சியருக்கு நான் அனுப்பிய மனு கைநகல் வா.சா.ஆ.8, 19.03.2008 தேதியில் இலால்குடி வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுத்த மேல்முறையீட்டு மனு கைநகல் வா.சா.ஆ.9, 29.10.2008 தேதியிட்ட இலால்குடி வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுத்த மனு கை நகல் வா.சா.ஆ.10, 20.12.2008 தேதியிட்ட மண்ணச்சநல்லூர் வருவாய் வட்டாட்சியருக்கு வருவாய் கோட்டாட்சியர் எனது மேல்முறையீட்டின் பேரில் அனுப்பிய குறிப்பாணை சார்வு நகல் வா.சா.ஆ.11, 22.05.2009 தேதியிட்ட தேதியிட்ட மண்ணச்சநல்லூர் வருவாய் வட்டாட்சியருக்கு வருவாய் கோட்டாட்சியர் எனது மேல்முறையீட்டின் பேரில் அனுப்பிய குறிப்பாணை சார்வு நகல் வா.சா.ஆ.12, 14.08.2009 தேதியிட்ட மண்ணச்சநல்லூர் வருவாய் வட்டாட்சியருக்கு வருவாய் கோட்டாட்சியர் எனது மேல்முறையீட்டின்

பேரில் அனுப்பிய குறிப்பாணை சார்வு நகல் வா.சா.ஆ.13, தாவா 1வது அட்டவணை சொத்தை பொறுத்து எனக்கு வழங்கப்பட்ட பட்டா சான்றிட்ட நகல் வா.சா.ஆ.14, தாவா சொத்தை பொறுத்த மின்கட்டண ரசீது அசல் எண்ணிக்கை–7 வா.சா.ஆ.15, தாவா சொத்தில் உள்ள நான் செலுத்திய வீட்டுவரி ரசீதுகள் எண்ணிக்கை–4 அசல் வா.சா.ஆ.16, தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கான மின்கணக்கீட்டு அட்டை எண்ணிக்கை –3 அசல் வா.சா.ஆ.17 ஆகும்.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.17 வரையிலான ஆவணங்கள் பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது.

வழக்கு குறுக்கு விசாரணைக்காக 30.08.2024 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.